www.Padasalai.Net www.CBSEtips.in

H

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 15×1=15**

1. "காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே ! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் -
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை , எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு -
அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ..................
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ..................
அ) வந்தான், வருகின்றான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

5. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

6. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

7. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

9. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவே அதனொடு நாவே
- இவ்வடிகளில் 'அதனொடு' என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

10. *விடை வரிசையைத் தேர்க:*
அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.
ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

க) நேவிக், சித்தாரா உ) நேவிக், வானூர்தி
ங) வானூர்தி, சித்தாரா ச) சித்தாரா, நேவிக்

11. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர் ...............

அ) சிவன் ஆ) அப்துல்கலாம் இ) மயில்சாமி அண்ணாதுரை ஈ) வளர்மதி

*பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:*

தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

*வினாக்கள் :*

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
14. "முத்தமிழ்" - இத்தொகைச் சொல்லை விரித்து எழுதுக.
15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

## பகுதி - II

### *பிரிவு - 1*

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க (21 ஆவது வினா கட்டாய வினா) 4×2=8

16. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
17. பட்டிமண்டபம், பட்டிமன்றம் - இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.
18. கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.
19. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச்சொற்களைத் தருக.
20. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
21. 'தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### *பிரிவு - 2*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 5×2=10

22. *பொருள் எழுதித் தொடரமைக்க:*

அ) கரை ஆ) கறை

23. *கலைச்சொல் தருக:*

அ) Launch Vehicle ஆ) Download

24. *தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க :*

அ) இளமையில் கல்வி ................ ஆ) சித்திரமும் கைப்பழக்கம் ..............

25. *அடைப்புக்குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக:*

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத் தொடராக)

ஆ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக)

26. *மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:*

அ) மேடும் பள்ளமும் ஆ) கண்ணும் கருத்தும்

27. *சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக (இரு தொடர்கள்)*

குழந்தை சிரித்தது

28. *பகுபத உறுப்பிலக்கணம் தருக:* கொள்வார்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமான விடையளிக்க:** 2×3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

30. *பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:*

பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும். மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு உறைக்கிணறு என்றும், மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு ஊருணி என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

*வினாக்கள் :*

அ) பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியை எவ்வாறு அழைப்பர்?

ஆ) மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை எது?

இ) 'உறைக்கிணறு' - விளக்கம் தருக.

31. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (34வது வினா கட்டாய வினா) :** 2×3=6

32. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

33. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

34. 'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

'ஒன்றறி வதுவே' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :** 2×3=6

35. வல்லினம் மிகா இடங்கள் மூன்றனைக் கூறுக.

(அல்லது)

வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

36. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

37. சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியினைச் சுட்டி விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 5×5=25

38. பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

(அல்லது)

உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

39. *நயம் பாராட்டுக:*

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

- கவிமணி

40. மாணவர்களாகிய உங்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புகள் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

41. *மொழி பெயர்க்க :*

அ) Every flower is a soul blossoming in nature - Gerard De Narvel
ஆ) An early morning Walk is a belssing for the whole day - Henry David Thoreau
இ) Sunset is still my favourite Colour, and rainbow is second - Mattie Stepanek
ஈ) The art of people is a true mirror to their minds. Jawaharlal Nehru.
உ) The biggest problem is the lack of love and charity - Mother Teresa.

42. காட்சியைக் கண்டு கவினுறக் கருத்தளிக்க:




## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக: 3×8=24

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

44. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

45. அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

----------